தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.24618/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 29.01..2010 – இராமநாதபுரம்</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. ஏ. இராமசாமி<br>த/பெ. அழகுபிள்ளை<br>4–3–2, முத்துலாபுரம்<br>பூசாரிபட்டி அஞ்சல், நிலக்கோட்டை தாலுகா<br>திண்டுக்கல் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டாட்சியர் அலுவலகம்<br>நிலக்கோட்டை<br>திண்டுக்கல் மாவட்டம். |

----------

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் இன்று (29.01.2010) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. ஏ. இராமசாமி, பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி. ஏ. தனலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 19.11.08 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் நான்கு இனங்களுக்கு தகவல்கள் வழங்குமாறு கோரியிருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 05.1.09 அன்று முதல் மேல்முறையீடும், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 25.05.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடும் செய்துள்ளார். இவ்வாணையம் 16.9.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய உத்தரவில் மனுதாரர்

கோரிய தகவல்களை வழங்குமாறு உத்தரவிட்டிருந்தது. இவ்வாணையத்தின் உத்தரவிற்கு பிறகும் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்காததால் மீண்டும் மனுதாரர் இவ்வாணையத்திற்கு 03.10.09 அன்று மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் இன்றைய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் பட்டா வழங்குவது சம்பந்தமாக கோரிய நான்கு இனங்களுக்கும் தகவல்கள் வழங்குவதற்கு மனுதாரர் சில ஆவணங்களை சமர்ப்பித்தால் அவர் கோரிய தகவல்களை வழங்க இயலும் என்று இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். மனுதாரர், மாவட்ட ஆட்சியர் விசாரணை செய்ய உத்தரவிட்ட பின்பும் பொதுத் தகவல் அலுவலர் இருதரப்பினரையும் அழைத்து விசாரணை செய்யவில்லையென்று இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர் பட்டா வழங்குவது சம்பந்தமாக இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை செய்து உரிய ஆவணங்களை பெற்றுக் கொண்டு மனுதாரர் கோரிய நான்கு இனங்களுக்கும் அரசு ஆவணங்களில் உள்ளபடி முழுமையான, சரியான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், தகவல் வழங்கிய விபரத்தையும் இவ்வாணையத்திற்கு மூன்று வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 09.2.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.24618/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
நிலக்கோட்டை
திண்டுக்கல் மாவட்டம்.

திரு. அ. இராமசாமி
த/பெ. அழகுபிள்ளை
4–3–2, முத்துலாபுரம், பூசாரிப்பட்டி அஞ்சல்
நிலக்கோட்டை தாலுகா
திண்டுக்கல் மாவட்டம்.